மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 93 ஆசிரியர் பணியிடங்களில் 70 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 23 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமே நிரப்பப்பட்டு வருகின்றன. இதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்வு வாரியத்தின் மூலமாக விரைவில் நிரப்புவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

பேருந்து வசதி

***17663—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்திலிருந்து பொன்னேரி, தடபெரும்பாக்கம், கே.என். கண்டிகை, வெள்ளகுளம், தேவதானம், காணியம்பாக்கம், கல்பாக்கம் வழியாக மீஞ்சூர் வரை பேருந்தினை இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், தடபெரும்பாக்கம், கே.என். கண்டிகை, வெள்ளகுளம், தேவதானம், காணியம்பாக்கம், கல்பாக்கம் ஆகிய கிராமங்கள் மக்கள் தொகை அடிப்படையில் வளர்ந்துவரும் பகுதிகளாகும். எனவே, பொதுமக்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மேற்படி வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். புதிய பேருந்துகளுக்கான கூண்டு கட்டும் பணிகள் நடைபெற்று

2012 ஏப்ரல் 18]

வருகின்றன. புதிய பேருந்துகள் வரப்பெற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவின்படி இந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, பொன்னேரி தொகுதியில் செங்குன்றம், பொன்னேரி, வெள்ளக்குளம், கல்பாக்கம் வழியாக மீஞ்சூர் செல்ல சுமார் 47 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இந்த வழித் தடங்களில் சுமார் 50,000–க்கும் மேற்பட்ட பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி படிக்கும் மாணவர்கள் செல்வதற்கு பேருந்துகள் வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்களின் வாயிலாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

120—

மின்னாக்கி வசதி

*277—**திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, செக்காணூரணி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மின்னாக்கி வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS